# பத்திரிக்கை செய்தி

## நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருக்க ரூ.15,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர், வட்டம்-1, திருச்சி கைது

புகார்தாரர் திரு.ர.மனோஜ்குமார், ஸ்ரீரங்கம், திருச்சி என்பவர் M/s SNIPS சொல்யூசன் பிரைவேட் லிமிடேட், இரானுவ மூகாம், திருச்சி என்ற கம்பெனியில் தொழிலாளர் ஆலோசராக பணிபுரிகிறார். திருச்சி மாவட்டம், தொழிலாளர் துறையில் தொழிலாளர் தொடர்பான விசாரணைகாக திருச்சி மாவட்டம், தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர், திருச்சி வட்டம்-1 அலுவலகத்திற்கு சென்றிருந்தார். இது தொடர்பாக M/s SNIPS சொல்யூசன் பிரைவேட் லிமிடேட், நிறுவனத்தை ஆய்வு செய்ய வந்த தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர், வட்டம்-1 திரு.பூ.கார்த்திக் என்பவர் மேற்படி நிறுவனத்திற்கு எதிராக எந்தக் கருத்தையும் எழுதி தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக தனக்கு ரூ.15,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருச்சி பிரிவு அலுவலகத்தை அணுகி மேற்படி திரு.கார்த்திக் மீது புகார்மனு கொடுத்துள்ளார். இப் புகாரின் பேரில் இன்று 03.05.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.பூ.கார்த்திக், தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர், வட்டம்-1, திருச்சி, லஞ்ச பணம் ரூ.15,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

## ASSISTANT INSPECTOR OF LABOUR DEPARTMENT ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.15,000/- FOR NOT TAKE ACTION AGAINST COMPANY

The complainant Tr.R.Manojkumar, Srirangam, Trichy District is working as Labour Consultant for M/s SNIPS Solution Private Limited, Contonment, Trichy. He attend labour related enquiries in the Labour Department, Trichy. In this regard, Tr.B.Karthik, Assistant Labour Inspector, Circle-1, Trichy had inspected the M/s SNIPS Solution Private Limited, Contonment, Trichy and demanded Rs.15,000/- for not writing any remarks against the company and for not taking action under the Tamil Nadu Shops and Establishments Act & Rules. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tirchy detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 03.05.2023, during the trap proceedings, Tr.Karthik, Assistant Labour Inspector, Circle-1, Trichy reiterated his earlier demand and received the bribe amount of Rs.15,000/- from the complainant. The Accused was arrested.